# மெட்ரோ ரயில் நிலையங்களில் கண்காணிப்பு தீவிரம்

■ சென்னை

கரோனா வைரஸ் பரவாமல் இருக்க மெட்ரோ ரயில் நிறுவனம் சார்பில் மெட்ரோ ரயில் நிலையங்கள் மற்றும் ரயில்களில் கிருமிநாசினி தெளிப்பு மற்றும் பயணிகளிடம் பரிசோதனை நடத்தப்படுகிறது.

மெட்ரோ ரயில்களில் பயணிப்பவர்களின் நலனுக்காக பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இந்நிலையில், கரோனா வைரஸை தடுப்பதற்கான பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மெட்ரோ ரயில் நிலையங்கள் மற்றும் மெட்ரோ ரயில்களில் தொடர்ந்து தூய்மை பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ரயில் நிலையங்களிலும் தொடர்ந்து தூய்மைப்படுத்திட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

## விழிப்புணர்வு நடவடிக்கை

இதேபோல், மெட்ரோ ரயில் பயணிகளிடம் கரோனா வைரஸ் பாதிப்பு இருக்கிறதா? என பரிசோதனை நடத்திய பிறகே அனுமதிக்கப்படுகிறார்கள். மெட்ரோ ரயில் அலுவலர்கள், ஊழியர்களுக்கு கரோனா வைரஸ் பாதுகாப்பு குறித்து உரிய பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளன. மெட்ரோ ரயில் மற்றும் ரயில் நிலையங்களில் ஒலி பெருக்கி மூலம் கரோனா வைரஸ் தொடர்பாக விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

மெட்ரோ ரயில் பயணிகள் மற்றும் பொது மக்களுக்கு செல்போன் மூலம் கரோனா வைரஸ் தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் தொடர்பான குறுஞ்செய்தி அனுப்பப்பட்டு வருகிறது என சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம் தெரிவித்துள்ளது.